**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்</u>.**

முன்னிலை: செல்வி.E.ரிதுலா, B.A., L.L.B.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சேந்தமங்கலம்.

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் நாள், செவ்வாய்கிழமை

**<u>இ.ம.எண்.16/2026, இ.ம.எண்.17/2026 மற்றும் இ.ம.எண்.18/2026 இன்</u>**

**<u>அ.வ.எண்.43/2020</u>**

(நாமக்கல் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.233/2012)

1. மூக்காயி
2. சங்கர்
3. அதிர்ஷ்டம் .... மனுதாரர்கள்/14, 15, 17 பிரதிவாதிகள்

/எதிராக/

1. சடையன் (இறந்தார்)
2. சகுந்தலா
3. பன்னீர்செல்வம்
4. சந்திரன்
5. தேவராசன்
6. நித்யா
7. சத்யா
8. தங்கேஸ்வரன்
9. செல்வி
10. லதா .......எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுக்களானது என் முன்பு 09.07.2026-ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர்கள்/14, 15, 17-ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.முருகேசன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.தமிழ்செல்வன், அவர்கள் ஆஜராகியும், உள்ளனர். மனுக்களின் பிரமாணப்பத்திரிக்கைகள், எதிருரை, குறிப்பறிக்கைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**<u>பொதுவான உத்தரவு</u>**

**<u>இ.ம.எண்.16/2026:-</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்து, அசல் வழக்கில் கடந்த 14.08.2019-ம் தேதியில் முடிக்கப்பட்ட வாதிகள் தரப்பு சாட்சியத்தை மறுதிறவு (Re-open) செய்து உத்திரவிட கோரியுள்ளனர்.

**<u>இ.ம.எண்.17/2026:-</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்து, வா.சா.1, சாட்சியை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு மீண்டும் அழைக்க (Re-call) உத்திரவிட கோரியுள்ளனர்.

**<u>இ.ம.எண்.18/2026:-</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்து, அசல் வழக்கில் கடந்த 18.04.2026-ம் தேதியில் முடிக்கப்பட்ட 14, 15, 17-ம் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை மறுதிறவு (Re-open) செய்து உத்திரவிட கோரியுள்ளனர்.

**1. <u>மனுதாரர்கள்/14, 15, 17-ம் பிரதிவாதிகள் தரப்பு மனுக்களின் பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம்:</u>**

மனுதாரர்கள் தங்களது மனுவில், மேற்படி அசல் வழக்கில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு கடந்த 14.08.2019-ம் தேதியில் வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி சமயம் மனுதாரர்கள் வழக்கில் பதிலுரை தாக்கல் செய்யாமல் தோன்றாதரப்பினராக இருந்ததால், மனுதாரர்களால் வாதி தரப்பு சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது. அதன்பிறகு மனுதாரர்கள் மீது ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய பதிலுரையுடன் மனு தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு 2-ம் பிரதிவாதி தரப்பில் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்து, பின்பு 4-ம் பிரதிவாதி காலமாகிவிட்டதால் அதனை பொருத்து பல்வேறு மனுக்கள் தாக்கல்

செய்யப்பட்டு பிராது திருத்தம் செய்யப்பட்டு, மீண்டும் மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்னிறுத்தப்படாததால் கடந்த 18.04.2026–ம் தேதியில் மனுதாரர்கள் தரப்பு சாட்சியமும் முடிக்கப்பட்டு வாதுரைககாக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தொழில் நிமித்தமாக பல்வேறு மாநிலங்களுக்கு சென்று அங்கேயே தங்கி பணி செய்து வருவதால் மனுதாரர்களால் சரியான காலத்தில் வழக்கறிஞரை சந்தித்து மனுதாரர்கள் தரப்பு கட்சியை முன்வைக்க இயலாமலும், வாதியை குறுக்கு விசாரணை செய்ய இயலாமலும் போய்விட்டது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தொடக்கத்தில் 16–ம் பிரதிவாதி தான் மனுதாரர்களுக்காகவும், வழக்கறிஞர் அமர்த்தி கட்சி செய்துவந்தார். பின்னிட்டு நீதிமன்றத்திலிருந்து மனுதாரர்களுக்கு அழைப்பாணை வந்தவுடன் தான் 16–ம் பிரதிவாதி வழக்கை மனுதாரர்கள் சார்பாக வழக்கறிஞரை சந்தித்து வழக்கை முன்னெடுக்கவில்லையென்பதும் அதன் காரணமாக வழக்கறிஞர் மனுதாரர்கள் சார்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்யாமலும் மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் விசாரிக்கப்படாமலும் விடுப்பட்டுள்ளது என்பது தற்போது தான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது. எனவே, இம்மனுக்களை அனுமதிப்பது அவசியமாய் உள்ளது. இல்லாவிடில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே, இம்மனுக்களை அனுமதிக்க கோரியுள்ளார்கள்.

**2. 3–ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்து 2, 4 முதல் 10–ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தமதாக ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–** *(இ.ம.எண்.16/2026 மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையையே இ.ம.எண்.17/2026, 18/2026 மனுக்களுக்கும் எதிருரையாக பாவித்துக் கொள்ள எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)*

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து, எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தங்களது பதிலுரையை தாக்கல் செய்துள்ளனர். அதில், மேற்படி வழக்கில் வாதிகள் தரப்பு விசாரணைக்காக கடந்த 14.08.2019–ம்

தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது என்பது உண்மை. ஆனால் மேற்படி தேதியில் மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. மேற்படி வழக்கு விவரங்கள் பொருத்து மனுதாரருக்கு வழக்கு தாக்கல் செய்திருந்த போதே வழக்கு விவரம் தெரியவந்துள்ள நிலையில் 2019–ம் ஆண்டு வாதி தரப்பு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் 7 ஆண்டுகள் கழித்து வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவேண்டுமென கூறி தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. மேலும் மனுதாரர்கள் எந்த மாநிலத்தில் எந்த இடத்தில் எப்போது இருந்து எப்போது வரை வேலை நிமிர்த்தமாக தங்கியிருந்தனர் என்பதை பொருத்தும், அதற்குண்டான ஆவணங்களை பொருத்தும், எவ்வித சங்கதிகளும் மனுவில் குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை. உண்மையில், மனுதாரர்கள் வெளி மாநிலங்களில் தங்கி பணிப்புரிந்து வந்திருந்தால் மேற்படி சங்கதிகளை குறிப்பிட்டு மனு தாக்கல் செய்திருப்பார்கள். மேலும் இருதரப்பு விசாரணை முடிக்கப்பட்டு தற்போது வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் வேண்டுமென்றே மேற்படி வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர்கள் இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். எனவே, இம்மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிடக் கோரியுள்ளனர்.

**3.** இம்மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வு காணப்படவேண்டியுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** மனுக்கள், பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, குறிப்பறிக்கைகள் மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

**5.1)** இவ்வழக்கு கோப்புகளை இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலித்ததில், எதிர்மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர்கள் மற்றும் இதர பிரதிவாதிகள் மீது விளம்புகை, பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரங்கள் கோரி கடந்த 2012–ம் ஆண்டு இந்த அசல் வழக்கை தாக்கல்

செய்துள்ளனர். மேற்படி அசல் வழக்கு தற்போது வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் இம்மனுக்களை தாக்கல் செய்து, கடந்த 14.08.2019 மற்றும் 18.06.2026–ம் தேதிகளில் முடிக்கப்பட்ட வாதிகள் மற்றும் மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை மறுதிறவு செய்யவும், வா.சா.1, சாட்சியை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு மீண்டும் அழைக்கவும் கோரியுள்ளனர். இந்த மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வு காண வேண்டியதாகும்.

**5.2)** மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் தொழில் நிமித்தமாக பல்வேறு மாநிலங்களுக்கு சென்று அங்கேயே தங்கி பணி செய்து வருவதால் மனுதாரர்களால் சரியான காலத்தில் வழக்கறிஞரை சந்தித்து வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது என்றும், மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்களை முன்னிலைப்படுத்த இயலாமல் போய்விட்டது என்றும், மனுதாரர்கள் தற்போது தான் வழக்கறிஞரை சந்தித்து மேற்படி விவரங்களை தெரிந்துகொண்டதனால் இம்மனுக்களை அனுமதிக்குமாறு வாதிடப்பட்டது. ஆனால், எதிர்மனுதாரர்கள் தரப்பில், வா.சா.1 சாட்சியை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால், மேற்படி வா.சா.1–னின் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது என்றும், தற்போது 7 ஆண்டுகள் கழித்து வா.சா.1 சாட்சியை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென கோரி தாக்கல் செய்திருக்கும் இம்மனுக்களானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேலும் தொழில் நிமித்தமாக மனுதாரர்கள் வெளி மாநிலங்களில் தங்கி பணிப்புரிவதாக கூறியுள்ள நிலையில், எந்த மாநிலத்தில் எந்த இடத்தில் எப்போது இருந்து எப்போது வரை தங்கியிருந்தனர் என்பதை பொருத்து சங்கதிகளோ அல்லது ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே, இம்மனுக்களை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வாதிடப்பட்டது.

**5.3)** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை இந்நீதிமன்றம் பரிசீலித்ததில், மனுதாரர்கள்/14, 15, 17 பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்யாததால் கடந்த 05.04.2019–ம் தேதியன்று தோன்றா

தரப்பினர்களாக்கப்பட்டுள்ளனர். பின்பு, வாதிகள் தரப்பில் வா.சா.1 சாட்சியம் விசாரிக்கப்பட்டு கடந்த 23.07.2019–ம் தேதியன்று 2, 4, 5–ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டும், கடந்த 14.08.2019–ம் தேதியன்று வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது. மேலும், கடந்த 17.09.2019–ம் தேதியன்று மனுதாரர்கள் தாக்கல் செய்யப்பட்ட உரிய மனுவின் பேரில் ஒருதலைபட்ச உத்திரவு ரத்து செய்யப்பட்டது என்று அறிய முடிகிறது. பின்பு பல வாய்தாக்கள் கொடுத்தும், மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்களை முன்னிலைப்படுத்தாததால் கடந்த 18.04.2026–ம் தேதியன்று அவர்களது சாட்சியம் முடிக்கப்பட்டது. தற்போது அசல் வழக்கானது இருதரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் பணி நிமிர்த்தமாக வெளிமாநிலங்களுக்கு சென்றதால் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யவும், தங்களது தரப்பு சாட்சியை முன்வைக்க இயலாமலும் போய்விட்டது என்று இம்மனுக்களில் எடுத்துரைத்துள்ள காரணம் இந்நீதிமன்றத்திற்கு ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் விசாரணை நீதிமன்றம் என்பதால், வழக்கில் முழுமையான தீர்வு காணும் பொருட்டும், பல்வேறு வழக்கு நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும், வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரர்களுக்கு இறுதியாக ஒரு வாய்ப்பளிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களை கருத்தில் கொண்டும், இவ்வழக்கானது கடந்த 2012–ம் ஆண்டில் இருந்து நிலுவையில் உள்ளதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுக்களானது செலவு தொகையுடனும் மற்றும் நிபந்தனையுடனும் அனுமதிக்கப்படுகிறது.

6. <u>முடிவாக,</u>

1) இம்மனுக்களானது செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது.

2) மனுதாரர்கள்/14, 15, 17–ம் பிரதிவாதிகள், மனுக்களின் செலவு தொகையாக ரூ.1500/–(ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு மட்டும்)–ஐ எதிர்வரும்

29.07.2026–ம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எதிர்மனுதாரர்கள்/வாதிகளிடம் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

3) மேலும் மனுதாரர்கள்/14, 15, 17–ம் பிரதிவாதிகள் தரப்பில், எதிர்வரும் 29.07.2026–ம் தேதியன்று வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்றும், தவறும் பட்சம் இம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

**அழைக்க–29.07.2026.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 21–ம் நாள் ஜூலை மாதம் 2026–ம் வருடம் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

RIDHULA E

Digitally signed by RIDHULA E
Date: 2026.07.21 15:57:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சேந்தமங்கலம்.

**<u>மனுதாரர்கள்/14, 15, 17–ம் பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை

RIDHULA E

Digitally signed by RIDHULA E
Date: 2026.07.21 15:58:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சேந்தமங்கலம்.

**<u>பொதுவான உத்தரவு</u>**

இ.ம.எண்.16/2026, இன்
இ.ம.எண்.17/2026 மற்றும்
இ.ம.எண்.18/2026 இன்
அ.வ.எண்.43/2020
நாள்.21.07.2026